# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.64/2020

2025 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 02.09.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. ராணி (DW–1) | வயது | : | 49 /2025 |
| த/க. பெயர் | : | திரு. ராஜா | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து கலியபெருமாளுக்கு சொந்தமானது என்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் ஆதியில் கலியபெருமாளுக்கு சொந்தமாக இருந்ததை எனது மாமனார் மாயகிருஷ்ணன் கிரயம் வாங்கி கொண்டார். வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி தாக்கல் செய்த ஆவணங்களில் எனக்கு ஏதேனும் ஆட்சேபணை இல்லை என்றால் உள்ளது. என்ன ஆட்சேபணை என்றால் தாவா சொத்தானது 30 வருடமாக எங்களது அனுபவத்தில் உள்ளது.
2) எனது மாமனார் 1987 ல் தாவா சொத்தை கிரயம் வாங்கியதாக சொல்லியதால் அதிலிருந்து தாவா சொத்தினை எனது மாமனார் பெயருக்கோ அல்லது எனது பெயருக்கோ வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் பெயர் மாற்ற சொல்லி கேட்டதற்கு வாதியானவர் மோசடியாக அவர் பெயரில் வாங்கி கொண்டார்.
3) வாதி ராஜேஷ்க்கு அவரது தகப்பனார் கலியபெருமாள் இனாம் செட்டில்மெண்ட் மூலம் தாவா சொத்தினை எழுதி கொடுத்தார் என்றால் அது பொய்யானது. ராஜேஷ்க்கு அவரது தகப்பனார் கலியபெருமாளை ஏமாற்றி இனாம் செட்டில்மெண்ட் மூலம் தாவா சொத்தினை வாங்கி கொண்டதாக சொல்கிறேனா என்றால் ஆமாம், அவ்வாறு வாங்கிய இனாம் செட்டில்மெண்ட் செல்லாது.
4) ராஜேஷ்க்கு அவரது தகப்பனார் கலியபெருமாளிடமிருந்து இனாம் செட்டில்மெண்ட் மூலம் தாவா சொத்தினை பெற்று பட்டா, சிட்டா வாதி ராஜேஷ் பெயருக்கு வாங்கப்பட்டுள்ளது என்றால் ஏமாற்றி வாங்கி

கொண்டார்கள். வருவாய் துறையை ஏமாற்றி பட்டா, சிட்டா வங்கி கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாமல் வாங்கி கொண்டார். இன்னாளது வரை தாவா சொத்து தொடர்பாக கலியபெருமாளோ ராஜேஷோ ஏதேனும் ஆவணம், வருவாய் ஆவணங்களோ எங்களது பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் எழுதி கொடுத்துள்ளார்கள்.

5) தாவா சொத்தினை ராஜேஷ் எங்களுக்கு எழுதி தருவதாக சொல்லி ஏமாற்றி விட்டார் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். ராஜேஷ் உரிமையாளர் என்பதை ஒப்புக்கொள்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தினை 30 வருடமாக அனுபவம் செய்து வருகிறேன் என்பதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னென்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கலியபெருமாள் மாயகிருஷ்ணனுக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். கலியபெருமாள் மாயகிருஷ்ணனுக்கு எழுதி கொடுத்த ஆவணமானது எந்த தேதியன்று எழுதி கொடுக்கப்பட்டது என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, 1987 ல் எழுதி தரப்பட்டது.

6) தாவா சொத்துக்கள் கலியபெருமாளுக்கு சொந்தமாக இருந்து இனாம் செட்டில்மெண்ட் மூலம் ராஜேஷூக்கு சொந்தமானது என்றால் தவறு. கலியபெருமாளை ராஜேஷ் அவரது சகோதரருக்கு தெரியாமால் மோசடியாக அழைத்து சென்று இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கி கொண்டார் என்பது எனது கட்சி என்றால் சரிதான். 28.07.2020 ல் நான் தாவா சொத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பதாகவும் அதை வாதிக்கு திருப்பி கொடுக்கவேண்டும் என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 29.10.2018 லிருந்து வாதி ராஜேஷ்க்கு சொந்தமான சொத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) 2018 லிருந்து தாவா சொத்தானது எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான், 1987 லிருந்து எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. வாதி ராஜேஷ் தாக்கல் செய்துள்ள இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று அது மோசடியான ஆவணம் என்றும் இந்நாள்வரை எந்தவித சட்ட நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது 1987 லிருந்து இந்நாள் வரை அனுபவம் செய்து வருவதாக சொல்வதற்கான எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் சொல்வது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

8) நான் கலியபெருமாளிடமோ ராஜேஷிடமிருந்தோ எந்தவித ஆவணமும் எழுதி வாங்காமல் இந்த வழக்கினை கட்சி செய்வதற்காக பின்னிட்டு கலியபெருமாளிடமிந்து தாவா சொத்தினை எழுதி வாங்கியதாக மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்து கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 28.06.2020 ல் தாவா சொத்து தொடர்பாக பஞ்சாயத்து பேசியதாக சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல. எனது முதல் நிரூபண வாக்குமூலத்தில் 5 , 6வது பாராவில் 1987 ம் வருடம் கிராம வழக்கப்படி வாய்மொழி ஏற்பாடாக கிரயம் செய்து கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் 11வது பாராவில் கிரய ஒப்பந்த ஏற்பாட்டின்படி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) மாயகிருஷ்ணனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள், தற்போது உயிருடன் 2 பேர் உள்ளனர். மாயகிருஷ்ணனுக்கு எத்தனை வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்றால் 4 பேர் உள்ளனர். எனக்கும் கிராம நிர்வாக அலுவலருக்கும் எந்தவித பகையும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் ராஜேஷிடமோ அல்லது கலியபெருமாளிடமோ தாவா சொத்தினை கிரயம் செய்து தரவேண்டும் என்பதற்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எப்போது அனுப்பினேன் என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, 2020 ல் அனுப்பினேன். 2020 ல் சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கான நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

10) அந்த சட்ட அறிவிப்பில் தாவா சொத்தினை எனது பெயருக்கு எழுதி தரும்படி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. **(தற்போது சாட்சியானவர் தாவா சொத்தினை பத்திரப்பதிவு செய்து தரவேண்டும் என ஊர் பஞ்சாயத்து பெரியவர்கள் மூலம் பேசியதாகவும், சட்ட அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது என்று சொல்கிறார்).**

11) தாவா சொத்து கிரயம் பேசியதாக சொல்லியுள்ளதால் எவ்வளவு ரூபாய்க்கு பேசப்பட்டது என்றால் ரூபாய்.10000 க்கு பேசப்பட்டது. பணம் யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் கலியபெருமாளிடம் கொடுக்கப்பட்டது. இந்த விபரத்தை நான் எனது எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்திற்கு அருகில் எனது சாகுபடி நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை வாதியிடம் நான் கிரயம் கேட்டு அவர் மறுத்ததால் நான் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல.

12) வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை நான் ஆக்கிரமித்து வைத்திருப்பதால் சட்டப்படி வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1987ம் ஆண்டு கலியபெருமாள் என் மாமனாருக்கு கிரய ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்வது மோசடியானது என்றால் சரியல்ல. வாதிக்கும் வாதியின் தகப்பனாருக்கும், எங்களுக்கும் எந்தவிதமான ஆவணமும் தாவா சொத்து பொறுத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி வாதிக்கு தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.08 17:52:13 +0530

District Munsif
Mannargudi.